ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2093/7 - 2018 ඔක්තෝබර් මස 16 වැනි අඟහරුවාදා - 2018.10.16
*2093/7 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### காடு பேணற் கட்டளைச் சட்டம்

*1966 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1979 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1982 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1988 ஆம் ஆண்டின் 84 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1995 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 2009 ஆம் ஆண்டின் 65 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான (451 ஆம் அத்தியாயம்) காடு பேணற் கட்டளைச் சட்டத்தின் 3 "அ" ஆம் பிரிவின் கீழான கட்டளை.*

கட்டளை

*1966 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1979 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1982 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1988 ஆம் ஆண்டின் 84 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1995 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 2009 ஆம் ஆண்டின் 65 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான (451 ஆம் அத்தியாயம்) காடு பேணற் கட்டளைச் சட்டத்தின் 3 "அ" ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், கீழ் இணைக்கப்பட்டுள்ள இல. 01, 02 ஆகிய அட்டவணைகளில் வரையறுக்கப்பட்டுள்ள எல்லைகளுக்குள் உட்பட்ட 6.9048 ஹெக்டயார் விஸ்தீரணத்தைக் கொண்ட போகல்கந்த காட்டை 2018 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 21 ஆந் திகதியிலிருந்து போகல்கந்த பேணற்காடு என இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.*

மைத்திரிபால சிறிசேன,
மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சர்.

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு,
பத்தரமுல்ல,
*2018, செத்தெம்பர் 21.*

**அட்டவணை 01 (கீழ் போகல்கந்த)**

மத்திய மாகாணத்தின், நுவரெலியா மாவட்டத்தின், அம்பகமுவ பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள அம்பகமுவ கோறளை மெடில்ல கிராமத்தின் FVP 105 வரைபடத்தின் துண்டு இலக்கம் 57 ஐக் கொண்ட அரசாங்கத்துக்குச் சொந்தமான 3.1898 ஹெக்டயார்ஸ் விஸ்தீரணத்தைக் கொண்ட காணியாகும் :-

வடக்கு : FVP 104 கோனாவல, FVP 105 மெடில்ல, துண்டு இலக்கம் 21, 56, 22 1/ 2, 24, 56, 33 (தினியகல ஓடை) ;

கிழக்கு : FVP 104 கோனாவல, துண்டு இலக்கம் 25, 54, 53, 51, 50, 49, 48, 47, 46, 47, 48, 49, 50, 52, 53, 54, 55, 27, 29, 58, துண்டு இலக்கம் 33 (தினியகல ஓடை), FVP 108 தினியகல ;

தெற்கு : துண்டு இலக்கம் 32, துண்டு இலக்கம் 33 (தினியகல ஓடை), FVP 105 மெடில்ல, FVP 108 தினியகல ;

மேற்கு : துண்டு இலக்கம் 33 (தினியகல ஓடை), துண்டு இலக்கம் 32, 31, 32, FVP 105 மெடில்ல, FVP 108 தினியகல.

விஸ்தீரணம் : 3.1898 ஹெக்டயார்ஸ்.

**அட்டவணை 02 (மேல் போகல்கந்த)**

மத்திய மாகாணத்தின், நுவரெலியா மாவட்டத்தின், அம்பகமுவ பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள அம்பகமுவ கோறளை கோனாவல கிராமத்தின் FVP 104 வரைபடத்தின் துண்டு இலக்கம் 178 ஐக் கொண்ட அரசாங்கத்துக்குச் சொந்தமான 3.7150 ஹெக்டயார்ஸ் விஸ்தீரணத்தைக் கொண்ட காணியாகும் :-

வடக்கு : துண்டு இலக்கம் 35, 34 ரதாஓயா, 179, FVP 104 கோனாவல ;

கிழக்கு : துண்டு இலக்கம் 34, ரதாஓயா, துண்டு இலக்கம் 179, 40, 182, 44, 46, FVP 104 கோனாவல ;

தெற்கு : துண்டு இலக்கம் 46, 45, 46, 181, 37, 38, 36, FVP 104 கோனாவல, FVP 105 மெடில்ல ;

மேற்கு : துண்டு இலக்கம் 181, 180, 38, 177, 35, FVP 104 கோனாவல, துண்டு இலக்கம் 34, ரதாஓயா, FVP 105 மெடில்ல.

விஸ்தீரணம் : 3.7150 ஹெக்டயார்ஸ்.

11-48

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.